# பண்மகள்

PANMAGAL பண்மகள்

இதழ் : 05 ஜனவரி - செப்ரெம்பர் 2009 அன்பளிப்பு : 20ரூபா


*பண்மகள் 185ஆவது ஆண்டுச் சிறப்புமலர்*

# சிறப்புற நடந்த வெளியீட்டு விழா



எமது பாடசாலை 185 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளமையை நினைவு கூரும் வகையில் பண்மகள் 185ஆவது ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ் கனதியான விடயச் சேர்க்கை யோடு சென்ற ஆண்டு இறுதியில் வெளியிடப்பட்டது. நூல் வெளியீடு, பரிசளிப்பு ஆகிய இரு நிகழ்வுகளும் 15-11-2008 அன்று காலை 10.00 மணிக்கு அதிபர் திருமதி கி. சிவராஜா தலைமையில் நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். அவரது பாரியார் திருமதி கௌரி சண்முகலிங்கன் அவர்கள் (ஆசிரியை, வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை) பரிசில்களை வழங்கினார். கௌரவ விருந்தினராக எமது பாடசாலையின் புகழ்பூத்த பழைய மாணவி திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் கலந்துகொண்டார்.

பண்மகள் மலரை பேராசிரியர் என். சண்முகலிங்கன் அவர்கள் வெளியிட, பழைய மாணவியான திருமதி கமலலோஜினி சின்னத்தம்பி அவர்கள் பெற்றுக்கொண்டார்.



# பண்மகள்

காலாண்டிதழ்

ஆலோசனை
திருமதி கி. சிவராஜா
(அதிபர்)

ஆசிரியர்
திரு. சு. ஸ்ரீகுமரன்

இணையாசிரியர்
திருமதி F.R.J. ஜெயந்தன்

ஆசிரியர் குழு
திருமதி தி. கருணீசன்
செல்வி கௌ. இராசதுரை
திரு. பொ. அமிர்தலிங்கம்

கணனி வடிவமைப்பு
திரு. ச. விக்கினேஸ்வரன்

அச்சுப் பதிப்பு
J.S. பிறிண்டேர்ஸ்
பண்டத்தரிப்பு

வெளியீடு
பண்டத்தரிப்பு
பெண்கள் உயர்தர
பாடசாலை


# தலைவாசல்

இவ்வாண்டு தகவல் தொழிநுட்பம் மற்றும் ஆங்கில மொழி ஆண்டாக ஜனாதிபதி அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. எமது தேசிய குறிக்கோள்களுள் ஒன்றான மாறிவரும் உலகச் சூழலுக்கு அமைவாகத் தம்மைத் தயார்ப்படுத்தல் என்ற எண்ணக் கருவை வலுப்படுத்துவதாகவே ஜனாதிபதி அவர்களின் பிரகடனம் அமைந்துள்ளது.

மாறிவரும் உலகச் சூழலை நன்கு விளங்கி, அதற்கேற்ப எம்மைத் தகவமைத்துக் கொள்ளாமல் விடுவோமானால் நாம் வரலாற்றின் காலாவதியான மனிதர்களாகி விடுவோம். உலக ஓட்டத்திலிருந்து விலகி பின்தங்கி, எம்மைத் தாழ்த்திக் கொள்பவர் களாகி விடுவோம்.

இந்த உண்மையை உணர்ந்து தகவல் தொழிநுட்பத்திலும், ஆங்கில பாடத்திலும் எமது அறிவை ஆழப்படுத்திக் கொள்ளும் வழிவகைகளை நாம் தேட வேண்டும். தனியார் கல்வி நிலையங்களில் அதிக பணத்தைச் செலவு செய்து வீணடிப்பதைக் காட்டிலும் சுயகற்றல் அதிக பயனைத்தரும். கூடவே குழுநிலையில் கற்ற விடயங்களைக் கலந்துரையாடுவது விடயத் தெளிவுக்கு வழிவகுக்கும் யாழ். பொது நூலகத்தில் யு. எஸ். எய்ட் நிறுவனத்தின் அனுசரணையில் கணனி மூலமாகக் கற்கும் ஆங்கிலக் கற்கை நெறி DynEd என்ற பெயரில் நடைபெறு கிறது. சமகாலத்தில் கணனி அறிவும். ஆங்கில அறிவும் சுயகற்றலும் கைகூடும் சிறப்பான கற்கையிது. இவ்வாறான வழி முறைகள் மூலம் குறைவாகப் பணத்தைச் செலவு செய்து நிறைவான பயனைப் பெறலாம். எவ்வாறெனினும் தகவல் தொழிநுட்பத்திலும் ஆங்கிலத்திலும் எமது அறிவைப் பெருக்குவது காலத்தின் கட்டாய தேவையாகும்.

–ஆசிரியர்–

# ஆற்றங்கரைக் காட்சி

வி. கிருஷ்ணவேணி
2011 கலை

"ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்பது ஔவையின் அமுத மொழி. யாழ்ப்பாணத்துக்கு ஆறில்லை. அதனால் வேறு எந்த அழகு இருந்தும் இயற்கை அழகும், செழிப்பும் இங்கு குறைவாகவே இருக்கின்றன. ஆனால் இலங்கையில் மத்திய மலை நாட்டில் உற்பத்தியாகும் ஆறுகள் நாலா புறமும் ஓடிச்சென்று பல இடங்களையும் செழிப்பும் வளமும் உடையதாக ஆக்குவது நாம் அறிந்ததே. இவ்விடத்தில் நான் கண்ட ஆற்றின் இனிய காட்சியைக் கூறுவது பொருத்தமாக இருக்கும்.

சிவனொளிபாத மலையில் உற்பத்தியாகி ஓடி வரும் மகாவலி கங்கை ஹற்றன் மேட்டு நிலத்தில் விழுந்து அருவியாக ஓடி இறுதியில் திருகோணமலையில் கடலில் கலந்து விடுகிறது. அது ஒரு கன்னிப்பெண் போல் வளைந்தும் நெளிந்தும் ஆடியும் பாடியும் வரும் பொழுது கண்ணுக்கு இனிய காட்சியை வழங்கத் தவறுவதில்லை.

சிவனொளிபாத மலையில் உற்பத்தியாகும் மகாவலிநதி ஓடி வருங் காலத்தில் அதனோடு இணைந்தும் பிணைந்தும் உறவாடும் நிலப்பகுதியெல்லாம் பசுமையாகக் காட்சியளிக்கின்றன. பாலுடன் கலக்கும் நீர் வெண்மையாவது இயற்கையே. பூவோடு சேர்ந்த நாரும் நறுமணம் பெறுவது போலவும், சிவனின் தலையிலே திங்கள் அமர்ந்து சிறப்புறுவது போலவும் - செடியாகவும், பூவாகவும், மரமாகவும் வளர வைத்து பூமியை ஆறு அழகுறச் செய்கிறது.

மலையிலிருந்து குதித்து வரும் ஆற்றிலே குமரிப் பெண்ணின் முறுக்கும், செருக்கும் கூடிக்குலாவும். இதனால் பெரிய இரைச்சலுடன் முழங்கி அது அச்சத்தை எழுப்புவதுண்டு. பொங்கும் பால் போன்ற வெண்ணுரையோடு பாறையிலே அது பாய்ந்து வரும் காட்சியை நாள் முழுவதும் பார்த்துக்கொண்டே இருக்கலாம்.

வழியிலே தன்மீது சொரியப்பட்ட மலர்கள், இலைகள், சருகுகள் என்று எவற்றையும் விடாது அள்ளிக் கொண்டு வரும். அதன் கரையிலே நின்று அது வரும் காட்சியைக் கவனித்தால் பல நிறங்களில் ஆடை அணிந்து வரும் அழகான பெண்ணைப் போலவே தோன்றும்.

ஆற்றங்கரை மணல் சில இடங்களிலே கறுத்தும், சில இடங்களிலே வெளுத்தும், சிற்சில இடங்களிலே மஞ்சள் நிறம் பெற்றும் விளங்கும். ஆனால் எந்நிறத்திலும் அழகுக்குக் குறைவே இல்லை. ஆற்றுப்படுகை மணல் மேடு பள்ளமாக இருப்பதைக் கண்டு புலவர்கள் பெண்களின் சுருண்ட முடிக்கு ஒப்பாக வர்ணித்துள்ளனர்.

சூரியனின் வெப்பத்தை மறைத்து எந்நேரமும் குளிர்மையும் நிழலும் பரப்பி நிற்கும். மரக்கிளைகளில் குரங்குகள் கிளைக்குக் கிளை தாவி விளையாடும். பல வர்ணப் பறவைகளின் ஓசையும் காதுக்கும் மனதிற்கும் இன்பம் ஊட்ட வைக்கும்.

சில வேளையில் மரங்களின் மறைப்பையும் மீறிக்கொண்டு சூரியக்கதிர்கள் நதியின் நீர்ப்பரப்பில் படர்கையில் நீலமணி நீர் தங்கத்தகடு போலக் காட்சியளிக்கும். இந்த இயற்கை அன்னையின் எழில் பொங்கும் இன்பக் காட்சிகளை ரசிக்க இந்த ஜென்மம் போதாது எனலாம். "மகாவலிகங்கை வள நதியே" என்று புலவர் பாடியமை சாலப் பொருத்தமானதே.

## Zonal level English Competition

| | | | | |
|---|---|---|---|---|
| Copy Writing | - | Gr.13 | - | S. Piratheepa (1st Place) |
| Dictation | - | Gr. 7 | - | G. Anat Noyalin (1st Place) |
| Dictation | - | Gr. 10 | - | K. Thavaladsiya (3rd Place) |
| Dictation | - | Gr. 13 | - | S. Selvaleena (2nd Place) |

Senior Dialogue Drama - 3rd Place

---

சர்வதேச எய்ட்ஸ் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் எமது பாடசாலை மாணவிகள் செல்வி கு. சிந்துஜா, செல்வி கு. அழகுவதனா ஆகியோரின் கட்டுரைகள் மாகாண மட்டத்தில் தெரிவாகியுள்ளன. இவை தேசிய மட்டப் போட்டிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மாணவிகளுக்கு எமது பாராட்டுக்கள்.

---

**வலயமட்ட தமிழ்த்தினப் போட்டி**

தனிநடனம் பிரிவு 5 - செல்வி செ. செல்வலீனா (2ஆம் இடம்)
தனிநடனம் பிரிவு 1 - செல்வி ஜெ. தனுசியா (1ஆம் இடம்)
நாட்டிய நாடகம் - 3ஆம் இடம்

**மாவட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டி**

தனிநடனம் பிரிவு 1 - செல்வி ஜெ. தனுசியா (3ஆம் இடம்)

## சுகமான தென்றல் வீசட்டும்

த. தர்மினி
A/L 2011 கலை

ஆனந்த மழைதனில் நனைந்திடவே -மேலே
சுதந்திர முகில்கள் கூடி வருக.
வீணான துயரங்கள் அகன்றிடவே- நீயும்
தரியாது விரைந்தோடி வருக.
சோலையாயிருந்த மனங்களும் போரினால்
பாலையாய் மாறியே போயின.
விளைநிலம் யாவும் குருதியில் தோய்ந்திங்கு
போர்க்களம் என்றே ஆயின.
மாமிசக் கருவிகள் மனித உயிர்களை
வதைத்துச் சுவைத்துத் துப்பின.
மனங்களின் சோகக் கடல் குடித்து மீண்டும்
மேகங்கள் மழையெனத் தூவின.
பஞ்சு மெத்தையில் துயின்ற பாலகர்
பாயுமின்றி படுத்தனர் காண்- அந்த
பிஞ்சுக் கண்கள் மெய்வலிக்க வெறும்
பஞ்சு விளக்கினில் படித்தனர் காண்.
கர்ப்பம் கல்லறை இரண்டையும் ஓர் நாளில்
கண்ட சிசுக்களும் உண்டிங்கு.
கண்ணீரால் எழுதும் ஓவியங்கள் உண்மையில்
காவியங்கள் தான் ஈழத்தீவிலிங்கு.
புல்லட்டு மெய்பட்டும் ஷெல் பட்டும் கொல்பட்ட
யுத்தம் முற்றிலும் ஓயட்டும்.
சுதந்திரத் தீவினில் சுதந்திரத் தமிழனின்
சுகமான தென்றலும் வீசட்டும்.

### தோட்டப் போட்டி – 2009

"நாம் பயிரிடுவோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்" என்ற தொனிப் பொருளில் நடைபெற்ற பாடசாலைத் தோட்டப் போட்டியில் எமது பாடசாலை வலயமட்டத்தில் மூன்று பிரிவுகளிலும் வெற்றி பெற்றுள்ளது.

மேற்பிரிவில் முதலாமிடமும், இடைநிலைப் பிரிவில் இரண்டாமிடமும், கனிஷ்ட பிரிவில் மூன்றாமிடமும் எமது பாடசாலைக்குக் கிடைத்தன. இந்த வெற்றிக்கு அயராது பாடுபட்ட அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

# கடிகாரம் ஓடுமுன் ஓடு

செ. கஜாங்கனி
தரம் - 10A

மனிதனாய்ப் பிறப்பது என்பதல்ல நல்ல மனிதனாய் வாழ்வதே முக்கியமானது. ஒரு மனிதன் பிறப்பது முதல் இறப்பது வரை அவனது வாழ்வில் ஒரு முக்கியமான விடயமாக நேரம் விளங்கு கின்றது. உதாரணமாக சாப்பாடு, உறக்கம், கல்வி, விளையாட்டு, ஓய்வு போன்ற மனிதனின் அன்றாடச் செயற்பாடுகளில் நேரத்தைச் சரியான முறையில் பின்பற்றுவது அவசியமாகும்.




"ஆறின கஞ்சி பழங்கஞ்சி" எந்த வேலையாயினும் அதனை அதற்குரிய நேரத்தில் செய்து முடிக்க வேண்டும். நாம் வீணாக்கும் ஒவ்வொரு நொடியும் நமது வெற்றிப் பாதைக்குத் தடைக்கல்லாக மாறு கின்றது. நேரத்தைச் சரியான முறையில் பின்பற்றி நடந்தவர்களே வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்களாவர். இவர்கள் தமது பொன்னான நேரத்தை வீணாக்கமாட்டார்கள்.

ஒரு மனிதனின் நடத்தையைப் பார்த்தே அவன் பண்புள்ளவனா? அற்றவனா? எனத் தீர்மானிக்கப்படுகிறது. ஒருவன் தனது கடமையைச் சரியான நேரத்திற்குச் செய்து முடிக்கும் போது அவன் பண்புள்ளவனாகக் கருதப்படுகின்றான். மற்றவர்களால் மதிக்கப்படுகின்றான். அகமும் புறமும் தூய மாணவரே நாளை இந் நாட்டைத் தாங்கி நிற்கப் போகும் சமுதாயத் தலைவர்கள் என்பதை உணர வேண்டும். கல்வி கற்கும் வயதில் சோம்பிக் கிடவாது முயன்று படிக்க வேண்டும். இன்று நாம் குனிந்து எழுதும் எழுத்து நாளை எம்மை நிமிர்ந்து நடக்க வைக்கும். நேரத்தை வீணாக்கி கூடி அரட்டையடிப்பதனாலேயோ, தேவையற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதனாலேயோ எப்பயனும் கிடைக்கப் போவது இல்லை. ஒரு மாணவன் எவ்வளவு நேரம் உண்மையாகப் படிக்கிறானோ அதேயளவே அவனது பெறுபேறு அமையும். நாம் நேரத்தை வீணடிக்கும் போது ஒரே நேரத்தில் மூன்று பேருக்குத் துரோகம் செய்கின்றோம். நம்மை இவ்வுலகிற் பிறக்கச் செய்து, பசியாற்றி நமக்காகவே வாழும் பெற்றோர்கள், நம்மை மேல் நிலைக்குக் கொண்டு வருவதற்காக அயராது பாடுபடும் சுயநலமற்ற ஆசிரியர்கள், நம்மை ஆறறிவு உள்ள மனிதனாகப் படைத்த கடவுள் ஆகியோரே அவர்களாவர்.

தலைசிறந்த சாதனைகள் பெரும்பாலும் இளமையின் சாதனைகளே. எனவே மாணவர்களாகிய நாம் சிறு பராயத்திலிருந்தே நேரத்தைச் சரியான முறையில் பின்பற்றி பெற்றோர், ஆசிரியர், கடவுளின் ஆசியைப் பெற்று வாழ்க்கையிலே வெற்றி வாகை சூடுவோமாக.

## மரங்கள் நடுவோம்



மரங்கள் பலதை
நாட்டிடுவோம்.
பசுமை வளத்தைப்
பேணிடுவோம்.
இயற்கை அழகை
இரசித்திடுவோம்.
நிறைந்த பயனைப்
பெற்றிடுவோம்.
காட்டு மரங்களைக்
காத்திடுவோம்.
பிராணிகள் அனைத்தையும்
வாழ வைப்போம்.
நிறைய மரங்கள்
நட்டு வந்தால்
மீண்டுமொரு "மாத்தாய்"
உருவாகிடலாம்.
நோபல் பரிசும்
வென்றிடலாம்.

சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்காக உழைத்தமைக்காக 2004இல்
நோபல்பரிசு பெற்ற கென்ய நாட்டுப் பெண்மணி வங்காரி மாத்தாய்.

க.தவலட்சியா
தரம் 10B

# எம் பண்பாடு எங்கே

"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்" என்பது கலித்தொகை" பண்பாடு என்பது தென்றலாக வந்து புயலாக ஒரு நாளில் மறைந்து விடுவதில்லை. ஓர் இனம் வாழையடி வாழையாக தம் முன்னோரின் வாழ் நிலையை அடி ஒற்றி பழகி வரும் வாழ்க்கை ஒழுக்கம் தான் பண்பாடு ஆகும். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் அவன் வாழும் மண்ணின் மணம், மரபுகள் பண்பாடாக மலரும். மனிதனின் சிந்தனை செழுமை யுறும் போது பண்பாடு சீர் பெறு கின்றது. அன்பு, இரக்கம், கருணை, எளிமை, விருந் தோம்பல், மனிதநேயம் போன்ற சீரிய பண்புகளைக் கொண்டு உருவானதுதான் தமிழர் பண்பாடு. அது அடுத்தவர் பொருள்மீது ஆசையற்ற வாழ்க்கைப் பண் பாட்டினை அடிநாதமாகக் கொண்டது.

இன்றைய தலைமுறையின ரிடம் தான் நன்றாக இருந்தால் போதும் என்ற தனி நபர் போகம் மட்டுமே வாழ்க்கையின் முக்கிய குறிக்கோளாக மாறியுள்ளது. இதன் விளைவு பொக்கிசமாகப் பேணப்பட வேண்டிய முதியோரும், பெற்றோரும் சுமக்கமுடியாத சுமையாகின்றனர். இதன் விளை வால் முளைத்தவைதான் முதியோர் இல்லங்கள். பொருளா தார நிலை குடும்பங்களைக் கூறுபோட்டன. இதனால் கூட்டுக் குடும்ப விருட்சம் ஒட்ட நறுக்கப் பட்டது. நாங்கள், எங்கள் என்ற மனோநிலை மாறி நான், எனது என்று எல்லாமே சுருங்கி விட்டதுடன் நிற்காது வாழ்க்கை யின் ஒவ்வொரு படியும் வணிகமய மானது.

பண்பாட்டு விழுமியம் நிறைந்த தமிழ் மணம் வீசும் மங்கையர் சேலைக் கலாச்சாரம் அங்கம் தெரிய உடுக்கும் அரைநிர்வாண நவீன மங்கையரின் கணிப்பில் பத்தாம்பசலித் தனமாகி விட்டது. இந்நிலைக்கு இன்றைய கல்வி முறையும் பல்வேறு ஊடகங்களும் முக்கிய தூண்டல் காரணியா கின்றன. தத்துவமேதை டாக்டர் ராதாகிருஸ்ணன் கல்வி பற்றிக் கூறுகையில் "வாழ்க்கையில் வெற்றி பெறுவது மட்டும் கல்வியின் நோக்கமில்லை. வாழ்க் கையை வளப்படுத்துவதே கல்வியின் உண்மையான நோக்கம்" என்கிறார். அறிவையும் மனதையும் சீராகச் செதுக்குவது தான் கல்வியின் நோக்கம். இன்றைய கல்வியின் நோக்கம் டொக்ரரையும், என்ஜினியரையும், கணக்காளரையும் உருவாக்கு வதாகவே உள்ளது. அது உண்மையான, உத்தமமான, அன்புள்ளம் கொண்ட, மனித நேயம் உள்ள மனிதனை உருவாக்கத் தவறியுள்ளது.

இன்றைய கல்வியில் பணத்தைத் தவிர, அது அள்ளித்தரும் உடல் சார்ந்த புலன் இன்பங்களையும் தவிர, வேறெந்த உயர்ந்த மதிப்பீடும் இல்லாமல் போனதே பண்பாட்டு சீரழிவிற்கு அடித்தள மிட்டது. கல்வியின் பயன் அறிவு. அறிவின் பயன் பண்பு. பண்பற்ற அறிவால் பயன் இல்லை.

காலமாற்றத்துடன் நாம் வாழவேண்டியது அவசியம்தான். ஆனால் பல நூற்றாண்டுகளாகச் சிறுகச் சிறுகச் சேமித்த பண் பாட்டுக் கருவூலங்களைச் சிறை வைத்து வாழவேண்டிய தில்லையே! உலக வல்லரசு களுடன் போட்டி போட்டு நவீன தொழிநுட்பத்தில் முன்னணியில் நிற்கும் ஜப்பான் நாட்டை நோக்கில் அந்நாடு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தனது மொழி கலாச்சார விழுமியங்களைச் சிதைத்து வாழ முற்படவில்லை. நம் பண்பாட்டையும் மொழியையும் நாமே மதிக்காது போனால் யார் மதிப்பார்கள்? "நாம் எதுவாக நினைக்கிறோமோ அதுவாகவே ஆகிறோம்". எனவே நம் பண்பாடு பேணி நல்லதே நினைத்து நலமே வாழ்வோம்.

**திருமதி அ. ஈஸ்வரன்**

## கல்வி



கலியுக மண்ணில்
காவிய மலராய்
தினம் புதுச் செயலாய்
நிகழ்வது கல்வி!
கலையிலும் நடையிலும்
உயர் வாழ்விலும் எமை
ஒன்றிணைப்பது கல்வி!
நற்பண்பினை வளர்த்து
நாம் நிமிர்ந்திட வைப்பது கல்வி.
அழியாக் கல்வியைப் பேணிடுவோம்
அனுதினமும் அதைத் தொடர்ந்திடுவோம்.

**க. லட்சியவதனா**
**தரம் - 6B**

# அரசனும் தோட்டக்காரனும்



தோட்டக்காரன் ஒருவன் தனது தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தான். அப்பொழுது அவ்வழியே வந்த இருவரின் கண்களிலும் அத்தோட்டத்தில் காய்த்துத் தொங்கிக் கொண்டிருந்த மாம்பழங்கள் தென்பட்டன. உடனே தோட்டக்காரனை அழைத்து அவற்றைத் தருமாறு கேட்டனர். அதற்கு அவன் "இவற்றை எனது அரசருக்காக வைத்திருக்கிறேன். அவருக்கு மாம்பழம் என்றால் மிகவும் விருப்பம். அதனால் இதை யாருக்கும் கொடுக்கமாட்டேன்" என்றான். "நிறையப் பணம் தருகிறோம். இவற்றில் சிலவற்றை என்றாலும் தா" என அவர்கள் கெஞ்சினார்கள். அவன் "இதை அரசர் மட்டுமே ருசிக்க வேண்டும். அதற்காகவே பாதுகாத்து வருகிறேன் இதை யாருக்கும் கொடுக்க மாட்டேன்" என்றான். அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.



சில நாட்களின் பின் தோட்டக் காரன் அரண்மனைக்கு பழக்கூடையுடன் சென்றான். அங்கே அரசனைக் கண்டதும் அதிர்ச்சியடைந்தான். தோட்டத்திற்கு வந்து மாம்பழம் கேட்டவர் அரசனே என்பதைப் புரிந்து கொண்டான். அரசனும் தோட்டக்காரனைப் பார்த்து "உன் அரசனுக்கு பழங்கள் கொண்டு வந்திருக் கிறாயா?" எனக் கேட்டார். "ஆமாம் அரசே" என அவன் பதட்டத்துடன் கூறினான். அவனுடைய விசுவாசத்தைப் பாராட்டிய அரசன் அவனுக்கு நிறையப் பரிசில்களை வழங்கினான். அவன் மகிழ்வுடன் அங்கிருந்து புறப்பட்டான்.

ச அபிரக்ஷன்
தரம் 5

✦ ✦ ✦

வலிகாமம் வலயத்தால் நடாத்தப்பட்ட கணித வினாடிவினாப் போட்டியில் தரம் 11 மாணவி ப. துஷாந்தினி மூன்றாமிடத்தையும், விஞ்ஞான வினாடிவினாப் போட்டியில் தரம் 11 மாணவி வே. நிந்துஜா முதலாமிடத்தையும் பெற்றுள்ளனர். இவர்களுக்கு எமது பாராட்டுக்கள்.

✦ ✦ ✦

# சுத்தம் சுகம் தரும்

எமது உடலையும், நாம் வசிக்கும் வீட்டையும், எமது சுற்றாடலையும் எப்போதும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். சுத்தமாக இல்லாது விடில் சூழல் அழுக்காகி துர்நாற்றம் வீசும். தொற்று நோய்கள் பரவும்.

நாம் குளித்து சுத்தமாக இல்லாவிடில் எமது உடலில் அழுக்குப் படிவதால் வியர்வை வெளியேற முடியாது. இதனால் தோல் நோய்கள் ஏற்படும். உடல் துர்நாற்றம் வீசும். எமது தோற்றத்தின் அழகு கெட்டுப்போகும்.

நாம் வாழும் சூழல் இன்று பல வழிகளிலும் அழுக்காகின்றது. சுத்தம் சுகம் தரும் எனவே எமது சூழலைப் பாதுகாப்பதும் உடல் சுத்தத்தைப் பேண வேண்டியதும் எமது கடமையாகும்.



நாம் கல்வி கற்கும் பாடசாலையும் சுத்தமாக இருத்தல் வேண்டும். பாடசாலைச் சூழலிலுள்ள குப்பைகள், அழுக்குகளை அகற்றுவதன் மூலம் நாம் பாடசாலையிலும் சுத்தத்தைப் பேணலாம்.

நாம் வாழும் வீடானது மிகவும் சுத்தமானதாக இருத்தல் அவசியமாகும். எமது வீட்டில் உள்ள குப்பை கூழங்கள், புல், பூண்டுகள் என்பவற்றை அகற்றுவதோடு மலசலகூடம், கிணறு, வீட்டின் உட்புறம் என்பனவும் சுத்தமாக இருத்தல் வேண்டும்.

இவை அனைத்தும் சுத்தமாக இருப்பின் நோய்கள் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். அவ்வாறு சுத்தமாக இல்லாது விடின் நோய்கள் ஏற்படும். உடல்நலம் பாதிக்கப்படும். பணவிரயம், நேரவிரயம் என்பவற்றையும் ஏற்படுத்தும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது ஆன்றோர் வாக்கு. இவ்வாறு நாம் நோயற்ற வாழ்வு வாழச் சுத்தம் அவசியம்.


எனவே உடலுக்கும் உள்ளத்திற்கும் இன்பம் சேர்க்கும் வண்ணம் சுத்தமாக இருக்கப் பழகிக் கொள்வோம்.

**கு.ரூபிஷா**
தரம் 5

# ABACUS

Abacus is an ancient device used in China and other Asian countries to perform arithmatic problems. It can be used to add , substract, multiply, divide and to calculate square roots and cube roots. The abacus consist of a frame containing columns of beads. The beads, which represent numbers are strung on wires or narrow wooden rods attached to the frame.

The ancient abacus is one of the oldest counting devices known to man. Teachers in the united states use it to teach place value in the number system. In Asia people use it to calculate arithmatic problems.



The abacus was used by the ancient Greeks and Romans. the Chinese abacus is called suan pam or soopoln, names that mean counting or rechoning board. The abacus is used in schools to helps students understand the place value in the number system. It has also been adapted to teach blind children arithmetic.

There are several types of abacuses, but they all work on the same principle. A typical chinese abacus consists more than 10 columns of beads. Each coloumn has two beads above the crossbar and five beads below it. Each upper bead represents five units and each lower bead equals one units.


The first column on the right is the ones column. The second column is the tens column. The third column is the hundreds. The fourth column the thousands and so on the ones column represents numbers from one to nine. Each bead below the crossbar has a value of one and each bead above the crosbar has a value of 5 ones (or 5)> The tens column represents numbers from 10 to 90. Each lower bead in the tens column represents 1 ten (or 10) and each upper bead represents numbers from 100 to 900. Each lower bead equals 1 hundred ( or 100) and each upper bead equals 5 hundred ( or 500).

**R. Sukitha**
Grade - 10A

## பாடசாலை நிகழ்வுகள்

### தரம் 01 கால்கோள் விழா

தரம் 01 மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா ஜனவரி மாதம் 12ஆந் திகதி இப்பாடசாலையில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு பண்டத்தரிப்பு ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி கே. சிவராஜா பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.



### தரம் 03 பிறந்தநாள் விழா

தரம் 03 மாணவர்களிற்கான பிறந்தநாள் விழா தை மாதம் 15ஆந் திகதி பாடசாலையில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு எமது பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி இ. இராஜசேகரம் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

### ஆரம்பப்பிரிவு – இல்ல மெய்வல்லுநர் போட்டி – 2009

ஆரம்பப்பிரிவு மாணவர்களின் இல்ல மெய்வல்லுனர் போட்டி ஜனவரி மாதம் 23ஆந் திகதி நடாத்தப்பட்டது. இதில் சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி. ரு. உதயரட்ணம் பிரதம விருந்தினராகவும், பண்டத்தரிப்பு ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி திருமதி சை. சிவராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

### உலகச் சுற்றுச்சூழல் தினம்

உலகச் சுற்றுச்சூழல் தினம் ஜூன் 5ஆந் திகதி சமூக விஞ்ஞான மன்றத்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இந்நிகழ்வில் புவி

வெப்பமடைதல் உட்பட சுற்றுச்சூழல் சம்பந்தமான பல விடயங்கள் குறித்த மாணவர்களதும். ஆசிரியர்களதும் பேச்சுக்களும், கவிதை களும், குறு நாடகமும் இடம்பெற்றன.

## விளையாட்டு அரங்கில் எமது பாடசாலை

எமது பாடசாலை விளையாட்டுத்துறையில் தொடர்ந்தும் பிரகாசித்து வருகின்றது. இதற்குக் காரணமாக அமைவது உடற்கல்வி ஆசிரியர் செல்வி மா. மோகனப்பிரியா, பயிற்று விப்பாளர்கள் திரு. டனிஸ், திரு. சுஜீவன், பொறுப்பாசிரியர்கள் ஆகியோரின் தன்னலமற்ற பங்களிப்பும், மாணவர்களின் கடின உழைப்புமேயாகும். இவ்வாண்டில் விளையாட்டு அணிகள் ஈட்டிய சாதனைகள் கீழே தரப்படுகின்றன.

### வலைப்பந்தாட்டம்

15 வயதுப்பிரிவு அணி சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியுடன் மோதி கோட்டச் சம்பியனாகியது. வலயமட்டத்தில் இராமநாதன் கல்லூரியுடன் மோதி 3ஆம் இடத்தைப் பெற்றது. 17 மற்றும் 19 வயதுப் பிரிவு அணிகள் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியுடன் மோதி கோட்டமட்டத்தில் இரண்டாம் இடங்களைப் பெற்றன. 19 வயது அணி சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியுடன் மோதி வலய மட்டத்தில் 3ஆம் இடத்தைப் பெற்றது.

### கரப்பந்தாட்டம்

15 வயதுப் பிரிவு கரப்பந்தாட்ட அணி சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியுடனும் 17 வயதுப் பிரிவு அணி மானிப்பாய் மகளிர் கல்லூரியுடனும் மோதி இரண்டாம் இடங்களைப் பெற்றன. 19 வயதுப்பிரிவு அணி மானிப்பாய் மகளிர் கல்லூரியுடன் மோதி கோட்டச் சம்பியனாகியது. இவ்வணி வலய மட்டத்தில் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அணியுடன் மோதி மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

**கூடைப்பந்தாட்டம்**

19 வயதுப் பிரிவு கூடைப்பந்தாட்ட அணி யாழ்ப்பாணக் கல்லூரியுடன் மோதி மூன்றாம் இடத்தை வலய மட்டத்தில் பெற்றுக் கொண்டது.

**மெய்வல்லுநர் போட்டி - வலயமட்டம்**

| | | | |
|---|---|---|---|
| கே. ஜனுசா | 17 வயதின் கீழ் | 1500மீ. ஓட்டம் | இரண்டாம் இடம் |
| கே. கிரிஜா | 19 வயதின் கீழ் | உயரம் பாய்தல் | இரண்டாம் இடம் |

**மாவட்ட மட்டம்**

| | | | |
|---|---|---|---|
| கே. ஜனுசா | 17 வயதின் கீழ் | 1500 மீ. ஓட்டம் | மூன்றாம் இடம் |
| கே. கிரிஜா | 19 வயதின் கீழ் | உயரம் பாய்தல் | மூன்றாம் இடம் |

## இல்ல மெய்வல்லுனர் போட்டி - 2008

எமது பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி 06-02-2009 அன்று நடைபெற்றது. நாட்டின் அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு மிக எளிமையாக நடத்தப்பட்ட இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக அதிபர் திருமதி கி. சிவராஜா கலந்து சிறப்பித்தார். பிரதி அதிபர் திருமதி இ. இராஜசேகரம், அதிபர், பகுதித் தலைவர்கள் திருமதி தி. கருணீசன், திருமதி கோ. ஸ்ரீகரன் ஆகியோர் அணிவகுப்பினை ஏற்றுக்கொண்டனர்.



சிறுகதை

# விடியலை நோக்கி

அதிகாலை பிள்ளையார் கோயில் மணி "டாங் டாங்" என ஒலிக்க எழுந்து என் கடமைகளை முடித்து விட்டு அலுவலகத்திற்கு விரைந்து கொண்டிருந்தேன். எதிரே ஒரு அழகிய உருவம். கருணை மிகுந்த அதே பார்வை. அவள் யாரென அப்போது எனக்குப் புரியவில்லை. காரிலே மின்னல் போல் சென்றுவிட்ட அவள் யாரென எனக்குள் வினவியபடியே அலுவலகத்தை அடைந்தேன். அவ்வேளை எனது மேசையிலிருந்து விழுந்த புத்தகத்திலிருந்து ஒரு புகைப்படம் எட்டிப் பார்த்தது. அதை நான் உற்றுநோக்கினேன். அப்புகைப்படம் எனது நண்பி சத்தியாவின் படம். நான் வீதியிலே கண்ட பெண்தான் எனது சத்தியா என்பதை உணர்ந்தேன்.

அந்தநாள் ஞாபகங்கள் என் கண்ணிலே மின்னல் போல் ஓடத் தொடங்கின. பூஞ்சோலைக் கிராமத்தில் பிறந்த அவளுக்கு அவளுடைய தாய் கமலராணி தான் எல்லாம். அவள் பிறப்பதற்கு முன்னே அவளுடைய தந்தை காலமாகிவிட்டார். அவளுடைய தாய்சந்தையிலே மரக்கறிகளை வாங்கி வீதி வீதியாக அலைந்து திரிந்து விற்ற பணத்திலே அன்றாட வாழ்க்கையை ஓரளவு நடத்தினார். சில வேளைகளில் அவ்விரு உள்ளங்களும் பட்டினியால் வாடுவதுமுண்டு. அவ்வாறு நாட்கள் கடந்து செல்ல அவளுக்கு ஆறு வயது ஆரம்பமாகி விட்டது. அவளைப் பாடசாலையில் சேர்க்க வேண்டும். ஊரிலிருந்த கலைமகள் வித்தியாலயத்தில் அவளைச் சேர்த்து விட்டனர். அவளுக்குப் படிப்பில் ஆர்வம் இருந்தாலும் வீட்டுச் சூழ்நிலை அவளது மனதைத் தாக்கியது.

என்ன செய்வதென்றே புரியாமல் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதிவிட்டு வெளியே தனியே நின்றுகொண்டிருந்தாள். அப்போது அவளது தோளிலே யாரோ தட்டுவதை உணர்ந்து திகைத்துப் போய்த் திரும்பினாள். அவர் அவளுடைய வகுப்பாசிரியை சுதா. ஆசிரியை சத்தியாவிடம் "என்ன சத்தியா மேகத்தைப் பார்த்துக்கொண்டு இருக்கிறாயோ?" என வினவினார். உடனே சத்தியா "என்ன ரீச்சர் செய்வது? எனது தாயின் நிலையும் மிகவும் மோசமாகப் போகுது. எனது அண்ணனும் காலில்லாததால்

ஒன்றுமே செய்யாமல் ஓரிடத்தில் முடங்கியிருக்கிறார். குடும்பமே என்னைத்தான் நம்பியிருக்கு" என்று கூறிக் கண்கலங்கினாள். உடனே ஆசிரியர் அவளது நிலையைப் புரிந்துகொண்டு "எனக்குத் தெரிந்த ஒரு இடத்திலுள்ள கடையில் பொருட்களை விற்பதற்கு ஒரு ஆள் தேவைப்படுகுதாம். ஆட்சேபனை இல்லையென்றால் உன்னை அங்கே சேர்த்துவிடுகிறேன்" என்று கூறினார். அவளும் அவ்வேளையில் ஒன்றுமே புரியாமல் ஆசிரியையின் கரங்களைப் பற்றி சம்மதம் தெரிவித்தாள். ஆசிரியை அவளை அக் கடையிலே சேர்த்துவிட்டார். மாதம் ஆயிரம் ரூபா சம்பளம். அவள் அதைக் கொண்டு தனது தேவைகளையும் குடும்பத் தேவைகளையும் நிறைவேற்றினாள். காலச் சக்கரம் சுழன்றது. "சத்யா வந்த நேரம்தான் கடையும் பெரிதாக வளர்ந்து நல்ல இலாபத்தை ஈட்டித் தந்துள்ளது" என்று முதலாளி அடிக்கடி கூறுமளவுக்கு அவள் செயற்பட்டாள்.

இவ்வாறிருக்கையில் அவளுடைய தாய் கமலராணி நோயால் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் அவளை வைத்தியசாலைக்கு சத்யா அழைத்துச் சென்றாள். அங்கு அவர்கள் கமலராணிக்கு சத்திரசிகிச்சை செய்தால் நோய் குணமாகிவிடும். ஆனால் அதற்கு பத்தாயிரம் ரூபா பணம் தேவை என்றனர். என்ன செய்வதென்று தெரியாமல் சத்யாவின் மனம் குழம்பியது. அப்பொழுது கடை முதலாளி சத்யாவைச் சந்தித்தார். என்ன பிரச்சினை என்று வினாவினார். அவளின் பரிதாப நிலையை அறிந்து சத்யாவிற்கு பத்தாயிரம் ரூபா பணம் கொடுத்து உதவினார். கமலராணியும் குணமடைந்துவிட்டார். பின்பு சத்தியா வழமைபோல் கடைக்கு வேலைக்கு செல்லத் தொடங்கினாள். அங்கு முதலாளி அவளது திறமைகளைப் பார்த்து அவளுக்கு மாதாந்த சம்பளமாக இரண்டாயிரம் வழங்கினார். காலங்கள் மின்னல் வேகத்தில் சென்றன. சத்யாவின் வாழ்வும் விடியலை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. இப்பொழுது அவள் முதலாளியின் மகனுடைய மனைவி. அந்த நிறுவனத்தை அவளே நிர்வகிக்கிறாள். காரில் பயணிக்கும் அவள் வாழ்வு ஒளிமயமாகிவிட்டது என எண்ணி கடவுளுக்கு மனதுக்குள் நன்றி கூறினேன்.

**செல்வி வே. நிந்துஜா**
தரம் - **11B**

# DO YOU KNOW THESE USES?

Given bellow are a few ending in 'use' can you discover what they are with the help of cluse?

01. ____________ use : it saved a lion from a trap
02. ____________ use : dwelling place
03. ____________ use : decline
04. ____________ use : make wrong use
05. ____________ use : to blame
06. ____________ use : to tickle the fancy
07. ____________ use : to awaken
08. ____________ use : husband or wife
09. ____________ use : jacket
10. ____________ use : read
11. ____________ use : carefully confound
12. ____________ use : to hesitate
13. ____________ use : wide acclamation
14. ____________ use :apply to wrong use
15. ____________ use : (adv & con ) for the reason that
16. ____________ use : reason induce
17. ____________ use : a small wingless parasitic insect.

**T. Januja -** A/L 2011

## 2008ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதரப் பெறுபேறுகள்

| | |
|---|---|
| 01) ஜானுஜா திருநாவுக்கரசு | 9A |
| 02) ஜனிதா கணேசலிங்கம் | 8A, 1B |
| 03) சரண்யா செல்வரட்ணம் | 6A, 2B, 1C |
| 04) கார்த்திகாயினி செல்வரட்ணம் | 4A, 1B, 2C, 2S |
| 05) அமீரா தவம் | 3A, 3B, 1C, 2S |
| 06) ஜெனிதா விநாயகமூர்த்தி | 3A, 1B, 1C, 2S |
| 07) சோபனா செல்வராசா | 2A, 1B, 4C, 2S |
| 08) தர்மினி தர்மகுலசிங்கம் | 2A, 1B, 2C, 4S |
| 09) பபிதா லோகநாதன் | 2A, 2B, 2C, 2S |
| 10) நிவேதிகா றெஜினோல்ட் | 2A, 4C, 2S |
| 11) பிரியதர்சினி றூபகாந்தன் | 1A, 3C, 5S |
| 12) கிருஷ்ணவேணி விக்கினேஸ்வரமூர்த்தி | 1A, 2B, 4C, 1S |

இவர்களுக்கும், இவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

**SEMP அனுசரணையுடன் மைக்ரோசொப்ட் நிறுவனமும், கல்வித் திணைக்களமும் இணைந்து நடாத்திய பாடசாலைகளுக்கிடையிலான மென்பொருள் ஆக்கப்போட்டியில் எமது பாடசாலை மாணவிகளும், ஆசிரியர்களும் பரிசில்களையும், சான்றிதழ்களையும் பெற்றுள்ளனர்.**

**மாணவிகள்:**

| | | |
|---|---|---|
| இ. அனுசாந்தினி | தரம் 8 - 2000ரூபா |
| இ. கிருசாந்தினி | தரம் 7 |
| ச. துஷாயினி | தரம் 7 |
| ஜே. லக்சிகா | தரம் 8 |
| நே. சிந்துஜா | தரம் 8 |
| ப. துஷாந்தினி | தரம் 11 |
| நே. தனுசியா | தரம் 11 |
| ஞா. தேவமலர் | தரம் A/L |
| சி. பிரதீபா | தரம் A/L |
| செ. சரணியா | தரம் A/L |
| ந. கஸ்தூரி | தரம் A/L |
| தே. சுகிதா | தரம் A/L |
| யோ. தர்சினி | தரம் A/L |
| சி. தனுசியா | தரம் A/L |
| ப. பவித்திரா | தரம் A/L |
| அ. வேர்ஜின் அனோஜியா | தரம் A/L |
| வி. ஜெயந்தினி | தரம் A/L |
| பி. மேரிஜான் றபேக்கா | தரம் A/L |

**ஆசிரியர்கள் :**

திருமதி நிதர்சினி பாலேந்திரதாஸ்
திருமதி தனலட்சுமி அகிலன்
திருமதி நெல்சி ரவீந்திரன்
செல்வி தவச்செல்வி சுப்பிரமணியம்
திருமதி மலர்விழி குணபாலன்


**இவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.**

## Do you know ----- Answers

01. Mouse 02. House 03. Refuse 04. Abuse 05. Accuse
06. Amuse 07. Arouse 08. Spouse 09. Blouse 10. Peruse
11. Confuse 12. Pause 13. Applause 14. Misuse 15. Because
16. Cause 17. Louse

# அருகிவரும் டொல்பின் இனம்

சமூகஆர்வலர்களால் உலகில் அருகிவரும் இனங்களில் பிரதானமாக அடையாளப்படுத்தப்படுவது டொல்பின் எனும் முலையூட்டியாகும். நீர் வாழ் உயிரினமாகிய இது கிட்டத்தட்ட 50 வகைப்பட்ட இனங்களைக் கொண்ட ஓர் சிறப்பான உயிரினமாகும்.



மிகவும் புத்திசாலித்தனமும், ஞாபக சக்தியும் உடைய டொல்பின் இனமானது மிகவும் பலமான உடலமைப்புடையது. அங்கிகளின் பரிணாம வளர்ச்சியில் "சிம்பன்ஸி" எனும் மனிதக் குரங்கினைவிட அறிவில் மேம்பட்டதாக கிரகிப்பு, பிரயோகம் போன்ற ஆற்றல்களைக் கொண்டு காணப்படுகிறது. இரக்க சுபாவமும் அன்பாகப் பழகும் ஆற்றலும் கொண்டு விளங்குவதனால் மனிதன் தன் தேவைகளுக்குப் பயன்படுத்துவதுடன் அவற்றின் உயிர் அச்சுறுத்தலுக்கும் காரணமாக விளங்குகின்றான்.

டொல்பின்கள் தனது சுவாசம், உணவு உட்கொள்வது ஆகியவற்றை நிகழ்த்தும் முறை அலாதியானது. நீரின் மேற்பரப்பில் பாய்ந்து கரணம் போடுவதெல்லாம் தனது சுவாசத்தினை திறம்பட நடத்தி முடிப்பதற்கே. வாயின் மேலிருக்கும் சிறு மூக்குத்துவாரம் தண்ணீரினுள் செல்லும்போது மூடிக்கொள்ளும். வளி மேற்பரப்பில் தானாகத் திறந்து சுவாசத்தை நிகழ்த்தும். டொல்பின்கள் கிட்டத்தட்ட இருநூறு பற்களைக் கொண்டிருப்பது ஆச்சரியமூட்டும் விடயமே. இப்பற்கள் வாள்களைப் போல் கூரியவை. வாயில் அகப்படும் மீன், கணவாய், சிறிய கடல்வாழ் உயிரினங்களை விரும்பி உட்கொள்ளும்.

மிக வித்தியாசமான ஒலி எழுப்பும் டொல்பின்கள் ஒலிபட்டு எதிரொலிப்பதைக் கொண்டு, பிற அங்கிகள் மற்றும் பொருட்களின் நிலையினைத் தீர்மானிக்கும் திறமை கொண்டது. டொல்பின்களுக்கு கண்பார்வை மிகக் குறைவாகையால் இரை தேடுவதற்கு கண்களைவிட காதுகளையே நம்பியிருக்கும். கூட்டம் கூட்டமாய் தன் இனத்தவருடன் ஒற்றுமையாக வாழும் நற்பண்பைக் கொண்டது. அளவில் பெரிய டொல்பின்கள் சிறியவற்றைக் காவல் காக்கும். பிற

அங்கிகளால் ஒரு டொல்பின் காயத்திற்குள்ளாக நேரிடின் ஏனைய டொல்பின்கள் முதலுதவி சிகிச்சைக்காக காயப்பட்ட டொல்பினைக் கடல் மட்டத்திற்கு மேலே எடுத்துச் சென்று சுவாசிக்க வைக்கும்.

தலையிலிருந்து வால்வரை சராசரி இரண்டு மீற்றர் நீளமுள்ள டொல்பின்கள் நீச்சலில் அசகாய சூரர்கள். வாலை மேலும் கீழும் அடித்தவாறு இருபது மீற்றர் ஆழம்வரை சென்று உடன் திரும்பக் கூடியவை. சுறாக்கள், திமிங்கிலங்கள், இயந்திரப் படகுகளுடன் போட்டி போட்டு நீந்துவதே இவற்றுக்கு விளையாட்டு. இதன் வழவழப்பான திண்ணிய உடலமைப்பு நீண்டதூரம் நீந்தவும், எதிரிகளிடம் இருந்து தப்பிக்கவும் உதவுகின்றது.

பூமிப் பந்தின் வடதென் அரைக்கோள பனிப்பாறைக் கடல்களைத் தவிர ஏனைய கடல்கள் யாவற்றையும் உறைவிடமாகக் கொண்ட டொல்பின்கள் நன்னீர் நிலைகளிலும் வாழக்கூடியவை. 'உலகில் அதிகளவில் காணப்பட்ட இவ்வுயிரினம் அருகிவரக் காரணமாக அமைந்தவை. இயற்கைக் காலநிலை மாற்றங்களும் மனிதனின் அச்சுறுத்தல் நடவடிக்கைகளுமே. மனிதர்களால் பிடிக்கப்படும் டொல்பின்கள் இறைச்சி, எண்ணெய் பெறப் பயன்படுத்தப்படுகிறது. போர்க் கப்பல்கள், எதிரிகளின் உளவு நீர்மூழ்கிகளை வேவு பார்த்தறியவும் இவற்றைப் பயிற்றுவிக்க முடியும். வழி தவறும் கப்பலுக்கு வழிகாட்டுதல், கப்பலில் தவறி கடலில் விழுந்த மனிதரைக் காப்பாற்றுதல், நீர்ச்சாகசம் செய்தல், தீ வளையத்தினூடு பாய்ந்து சாகசம் செய்தல் போன்ற செயற்பாடுகளிலும் டொல்பின்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றது.

இயற்கைப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் டொல்பின்கள் பாதுகாக்கப்படுதல் மிக அவசியமானது. இனப்பெருக்க வலிமை கூடிய இவ்வினம் கடலில் தொடர்ந்து உரிய முறையில் காக்கப்படுவதோடு நன்னீர் அதிகமாகவுள்ள நீர் நிலைகளிலும் சூழல் காப்பு நிலையங்களிலும் வளர்க்கப்பட வேண்டியதேவை ஏற்பட்டுள்ளது. இதன் மூலமே அருகிவரும் இவ்வினத்தைக் காத்து உயிரினப் பல்வகைமையைப் பேணமுடியும்.

**திரு. வே. சிவசக்திவேல்**

## சாதனைப் பெண்கள்

### திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்



சாதனைப் பெண்கள் வரிசையில் எமது பாடசாலையின் பழைய மாணவியான யோகேஸ்வரி அவர்களை இவ்வதழில் அறிமுகம் செய்கிறோம். மலேசியாவில் பிறந்து மூளாயில் வளர்ந்த திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் எமது பாடசாலையில் க.பொ.த உயர்தரம் வரை கல்வி கற்று இங்கிருந்து பேராதனை பல்கலைக் கழகத்துக்குத் தெரிவானார். அங்கு சமஸ்கிருதத்தைச் சிறப்புப் பாடமாகக் கற்றுப் பட்டம் பெற்றார். பின்னர் மக்கள் வங்கியில் பணியில் சேர்ந்து முகாமையாளராக உயர்வு பெற்று இளைப்பாறினார். பாடசாலை நாட்களில் மாணவர் மன்றத்தில் பேசுவது, போட்டிகளுக்கு எழுதுவது ஆகியவை காரணமாக சிறுகதை எழுதும் ஆர்வம் இவரிடம் வளர்ந்தது. தனது 17ஆவது வயதில் ஈழநாட்டில் எழுதிய சிறுகதையுடன் இலக்கியத்துள் பிரவேசித்தார்.

பின்னர் ஈழத்தில் வெளிவந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் பலவற்றில் இவரது ஆக்கங்கள் வெளிவந்தன. சிறுகதைகள் மட்டுமல்ல கவிதைகள், கட்டுரைகள், நாடகம், கடித இலக்கியம், விமர்சனம் எனப்பல துறைகளிலும் எழுதியுள்ளார். உணர்வின் நிழல்கள், ஈன்ற பொழுதில் கணநேர நினைவலைகள், மனம் விந்தையானதுதான், அரைநிமிட நேரம், உனக்கென்றுரைப்பேன் ஆகிய நூல்கள் இதுவரை வெளிவந்துள்ளன.

சார்க் மகளிர் அமைப்பு நடத்திய சிறுகதைப் போட்டியில் இவரெழுதிய "சோகங்களும் சுமைகளாகி" கதை முதற் பரிசைப் பெற்றமை உட்பட பல பரிசில்களையும் இவர் பெற்றுள்ளார். இவரது படைப்புலகம் பற்றி சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் ஆய்வுக் கட்டுரை யினையும் எழுதியுள்ளனர்.

1948ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 13ஆந் திகதி பிறந்த இவர் சென்ற ஆண்டு 60 வயதை நிறைவு செய்து மணிவிழாக் கண்டுள்ளார். மணி வயதில் எமது பாடசாலையின் 185ஆவது ஆண்டு நிறைவு விழாவில் இவரைக் கௌரவ விருந்தினராக அழைத்து கௌரவத்தை அளித்திருந் தோம். கல்லூரியின் பெருமைக்குரிய பழைய மாணவியான திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் மென்மேலும் தமிழுக்கும், தமிழ்ச் சமூகத்துக்கும் தனது சிறப்பான பங்களிப்பை வழங்க இறையாசியை வேண்டி, அவரை பாடசாலைச் சமூகம் சார்பில் வாழ்த்துவதில் மகிழ்வடை கிறோம்.

**திருமதி கி. சிவராஜா**
அதிபர்




வலிகாமம் கல்வி வலயத்தால் நடாத்தப்பட்ட சிந்தனை நிகழ்வு 22-02-2009 அன்று எமது பாடசாலையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. சி. கந்தசாமி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.



எமது பாடசாலையின் சாரணிய சிந்தனைநாள் 09-03-2009 அன்று நடைபெற்றது. இதில் விருந்தினராக வடமாகாண பெண்சாரணிய செயலாளரும் எமது பாடசாலை அதிபருமான திருமதி கி. சிவராஜா அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். இந்நிகழ்வில் சிரேஷ்ட ஆசிரியை திருமதி கோ. ஸ்ரீகரன் மங்கல விளக்கேற்றுகிறார்.

# பண்மகள் வெளியீடும் பரிசளிப்பு விழாவும்


படங்களின் பதிவுகள்



விருந்தினர்கள் வரவேற்கப்படுகின்றனர்.



மங்கல விளக்கேற்றல்



துணைவேந்தர் உரையாற்றுகிறார்



திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் உரையாற்றுகிறார்.



திருமதி கௌரி சண்முகலிங்கன் பரிசில் வழங்குகிறார்.